[25th March 1969

Car parking space in theatres

* 196. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of cars for which parking space should be provided in each cinema theatre in Madras City;

(*b*) the names of the cinema theatres which have provided such parking space;

(*c*) the names of the theatres which have not provided such parking space; and

(*d*) the action taken against these theatre owners?

திரைப்படக் கொட்டகைகளில் கார் நிறுத்த இடம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) சென்னை நகர திரைப்படக் கொட்டகைகளில் எத்தனை மோட்டார் கார்கள் நிறுத்த இடம் இருக்க வேண்டும் ?

(இ) அதன்படி எந்தெந்தக் கொட்டகைகளில் மோட்டார் கார்கள் நிறுத்த இட வசதி உள்ளது ?

(உ) இட வசதி செய்யாத கொட்டகைகள் எவை, எவை ?

(எ) அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

" Red Army "

* 197. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Left Communists are forming secretly an Army on the lines of the " Red Army " in Tamil Nadu; and

(b) if so, the action taken thereon?

செங்காவலர் படை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் இடது சாரி கம்யூனிஸ்டுகள் ரகசியமாக " செங்காவலர் படை " போன்று ஒரு படை தயாரிப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) சமூகப் பணி செய்தல், உழவர்களின் நலன் காத்தல், முதலான பொதுநல நோக்கங்களுக்காக, இந்தியப் பொதுவுடமை கட்சி (இடது சாரி) இம்மாநிலம் எங்கணும் "தொண்டர் படை" திரட்டக்கருதியுள்ள தாக அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ள தகவலிலிருந்து தெரியவருகிறது.

(இ) இது குறித்து இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை எதுவும் இதுவரை ஏற்படவில்லை.

---

a Printed as Appendix II on pages 28–29.